## மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

முன்னிலை – திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,
மாவட்ட நீதிபதி

**2026–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 09–ஆம் நாள் திங்கள்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2057 தைத் திங்கள் 26–ஆம் நாள்**

**முதலேற்பு வழக்கு எண்.232/2015 –ல்**
**வழக்கிடை விண்ணப்ப எண் 09/2025**

**பாஸ்கரன் (எ) சுப்ரமணியம்,**
**அவர் சார்பாக அவருடைய பகர அதிகார முகவர்**
**S.கனிமொழி** ...**மனுதாரர்/வாதி.**

**–எதிர்–**

**01. சின்னபையன்**
**02. கலா**
**03. இராஜேந்திரன்**
**04. குமார்**
**05. செல்வி**
**06.அரவிந்தன்**
**07. சேகர்** ...**எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

III rd ADJ Court, Salem

இந்த மனுவில் மனுதாரருக்காக வழக்குரைஞர் **திரு S.V.சிவக்குமார்** அவர் - களும் எதிர்மனுதாரர்களுக்காக வழக்குரைஞர் **திரு V.பொன்முடி** அவர்களும் தோன்றினர். இந்த மனு இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது இரு தரப்பினரும் முன்வைத்த வாதங்களை கவனத்தில் வைத்தும் வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந் நாள்வரை நிலுவையி லிருந்த இந்த மனுவில் இன்று இந் நீதிமன்றம் ஆணை பிறப்பிக்கிறது.

### ஆணையுரை

### முகவுரை

பாகப்பிரிவினைக்கான முதலேற்பு வழக்கில் ஏற்கனவே காட்டப்பட்ட சொத்துக்கள் இல்லாமல் மேலும் ஒரு சொத்தை 03-ஆம் இனச் சொத்தாக வழக்குரையில் சேர்க்க வழக்குரையை திருத்த அனுமதி கோரி உரிமையியல்

நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 06-ஆம் வகுமுறையின் 17-ஆம் விதியின்கீழ் மனுதாரர்/வாதி இந்த மனுவைத் தாக்கல்செய்துள்ளார்.

### மனுவின் சுருக்கம்

01. மனுதாரர்/வாதி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக பாகப்பிரிவினை நிவாரணம் கோரி முதலேற்பு வழக்கைத் தொடுத்துள்ளார். எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் அவர்களுக்குள் பாகப்பிரிவினை கோரி தொடுத்த முதலேற்பு வழக்கு எண் 402/2019 வழக்கு சேலம் 02-ஆம் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. அந்த வழக்கில் மனுதாரர்/வாதி தன்னிச்சையாக ஒரு தரப்பினராக இணைத்துக் கொண்டுள்ளார். அந்த வழக்கு நடவடிக்கையில் இவ்வழக்கின் 01-ஆம், 02-ஆம் இன சொத்துக்கள் உள்ளன. அதைத் தவிர்த்து மற்றொரு சொத்தும் உள்ளது. அச் சொத்திலும் மனுதாரர்/வாதிக்கு உரிமை உள்ளது என்பது மேற்சொன்ன வழக்கிற்கு பிறகே மனுதாரர்/வாதிக்கு தெரியவந்தது. பாகப்பிரிவினைக்கான இந்த வழக்கை அறுதியாக முடிவுசெய்ய அந்த சொத்தையும் இந்த வழக்கில் இணைப்பது அவசியம். ஆகையால், இந்த மனுவை அனுமதித்து மனுவில் சொல்லப்பட்டுள்ள விவரப்படியான சொத்தை வழக்கு 03-ஆம் இனச் சொத்தாக வழக்குரையில் திருத்துவதற்கு மனுதாரர்/வாதிக்கு அனுமதி வழங்க வேண்டும்.

### எதிருரையின் சுருக்கம்

02. இந்த வழக்கு 2015-ஆம் ஆண்டு தொடுக்கப்பட்டது. வழக்கு விசாரணைக்கு வரும் ஒவ்வொரு முறையும் மனுதாரர்/வாதி ஏதாவது ஒரு காரணம் சொல்லி வழக்கிடை விண்ணப்பங்கள் தாக்கல்செய்து வழக்கு

III rd ADJ Court, Salem

விசாரணையை நிறைவடையவிடாமல் செய்துவருகிறார். 17.09.2025-ஆம் தேதியன்று வாதி தரப்பு 01-ஆம் சான்றாளர் நிரூபண ஆணையுறுதி தாக்கல் செய்து முதல்விசாரணையில் சாட்சியமளித்து 13 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு வழக்கு குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டிருந்தபோது மனுதார் இந்த மனுவைத் தாக்கல்செய்துள்ளார்.

03. எதிர்பாராதவிதமாக தற்போது வழக்குரையில் சேர்க்கக் கோரும் சொத்தை விட்டுவிட்டதாக மனுதாரர் சொல்லியுள்ளது பொய். 2019 ஆம் ஆண்டு வழக்கிலே இந்த விவரம் சொல்லப்பட்ட நிலையில் 6 ஆண்டுகள் கழித்து தற்போது மனுதாரர்/வாதி இந்த மனுவை தாக்கல்செய்துள்ளார். வழக்கு நடவடிக்கைகளை விழிப்புடன் நடத்தாமல் அலட்சியமாகவும் மனம்போன போக்கிலும் நடத்தும் மனுதாரரின் இந்த செயல் ஏற்புடையதல்ல. ஆகையால், இந்த மனுவைத் தள்ளுபடிச் செய்ய வேண்டும்.

## தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்

04. **இந்த மனு அனுமதிக்கத்தக்கதா?**

## தீர்முடிவு

05. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் ஓர்வுசெய்யப்பட்டன. மனுதாரர்/வாதி வழக்கு 01-ஆம், 02-ஆம் இனச் சொத்துக்கள்மீது பாகப்பிரினை கோரி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்மீது முதலேற்பு வழக்கைத் தொடுத்துள்ளனர். முதலேற்பு வழக்கு எண் 402/2019 என்ற வழக்கும் இதேத் தரப்பினர்களுக்கு இடையே பாகப்பிரிவினைக்காக சேலம் 02-ஆம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்ற சங்கதியையும் அந்த வழக்கில் மனுதாரர்/வாதி தன்னையும்



III rd ADJ Court, Salem

ஒரு பிரதிவாதியாக இணைத்துக் கொண்டுள்ளார் என்ற சங்கதியும் அந்த வழக்கில் இந்த வழக்கில் இல்லாத மற்றொரு சொத்தும் உள்ளது என்ற சங்கதியையும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மறுக்கவில்லை.

06. பாகப்பிரிவினை வழக்கில் பிரிக்கப்பட வேண்டியச் சொத்து என்று சொல்லப்படும் அனைத்துச் சொத்துக்களும் சேர்க்கப்பட வேண்டும் என்பது நன்கு நிறுவப்பட்டச் சட்டவிதி ஆகும். அவ்வாறு இல்லாவிடின் பல்முனை வழக்கு நடவடிக்கைக்கு வழிவகுக்கும். தற்போது வழக்குரையில் சேர்க்கக் கோரும் சொத்துமீது பாகப்பிரிவினை கோரி மனுதாரர்/வாதிக்கு உரிமை உள்ளதா? இல்லையா? என்பது முழு விசாரணைக்குப் பிறகே முடிவுசெய்ய வேண்டும்.அதேச் சமயத்தில் அந்த சொத்தில் பாகம் உள்ளதா? இல்லையா? என்பது சம்மந்தமான பிரச்சனை இருக்கிறது என்பது மட்டும் தெரிகிறது. இந்த மனுவை அனுமதிப்பதால் இந்த வழக்கின் அடிப்படை மாறாது. என்பதோடு எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எவ்வித அநீதியும் விளையாது என்று இந் நீதிமன்றம் கருதுகிறது.

07. இருப்பினும் வழக்கு நடவடிக்கைகளை விழிப்புடன் நடத்தாமல் காலதாமதமாக இந்த மனுவைத் தாக்கல்செய்ததால் எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு ஏற்பட்ட இன்னலை ஈடுசெய்ய 3,500/- உரூபாயை மனுதாரர்/வாதி செலவுத்தொகையாக செலுத்த வேண்டும் என்ற நிபந்தனை -யுடன் இந்த மனுவை அனுமதிப்பது உகந்தது என்று இந் நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதிமுடிவு**

08. இறுதியாக, எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு மனுதாரர்/ வாதி 3,500/- உரூபாயை 16.02.2026-ஆம் தேதியன்றுக்குள் செலவுத் தொகையாக கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் இந்த மனு அனுமதிக்கப் படுகிறது. தவறினால் இந்த மனு தள்ளுபடிச் செய்யப்படும்.

**இந்த ஆணையுரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 09–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

PUGAZHENTHI V Digitally signed by PUGAZHENTHI V
Date: 2026.02.09 18:12:18 +0530

**மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிபதி,**

**சேலம்.**

**இணைப்பு:–** இல்லை

III rd ADJ Court, Salem